# மேல் மாகாண மாகாண சபை - சபைக் கூட்டம்

**2016 ஜூன் மாதம் 21 ஆந் திகதி மு.ப. 09.30 க்கு**

## நிகழ்ச்சி நிரல்

**I.** தவிசாளரின் அறிவிப்புக்கள்

**II.** அறிக்கைகளையும், ஆவணங்களையும், சமர்ப்பித்தல்

**III.** செயற்குழுக்களின் அறிக்கைகளைச் சமர்ப்பித்தல்

**IV.** மனுக்கள்

**V.** கேள்விகள்

**01.** **கௌரவ கே.டி. அறுணதீபால் உறுப்பினரினால் கௌரவ சுகாதார, உள்நாட்டு வைத்திய, சமூக நலன்புரி, நன்நடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்புச் சேவை, மகளிர் விவகாரம் அத்துடன் சபை நடவடிக்கை தொடர்பான அமைச்சரிடம் 2016.04.05 ஆந் திகதி கேட்கப்பட்ட கேள்வி : (கே/vi (1)16/30)**

அ. 2000 ஆம் ஆண்டு தொடக்கம் இது வரை தனிப்பட்ட உறுப்பினர்களின் நடவடிக்கையின் கீழ் சமர்ப்பிக்கப்பட்ட பிரேரணைகளின் எண்ணிக்கை எத்தனை ?

ஆ. இவற்றில் கலந்துரையாடலுக்கு (விவாதத்திற்கு) உட்படுத்தப்பட்டவற்றின் எண்ணிக்கை எத்தனை ?

இ. அகற்றிக் கொள்ளப்பட்ட அல்லது நிராகரிக்கப்பட்டவற்றின் எண்ணிக்கை எத்தனை ?

ஈ. ஏகமனதாக நிறைவேற்றப்பட்டவற்றின் எண்ணிக்கை எத்தனை ?

உ. மேலதிக வாக்குகலால் நிறைவேற்றப்பட்டவற்றின் எண்ணிக்கை எத்தனை ?

ஊ. தோல்வியடைந்த பிரேரணைகளின் எண்ணிக்கை எத்தனை ?

எ. அப் பிரேரணைகளுள் கல்வி, சுகாதாரம், கூட்டுறவு சட்டம் மற்றும் நியதிச் சட்டம் போக்குவரத்து ஆக ஒவ்வொரு விடயத்திற்கும் உரியதான பிரேரணைகள் எத்தனை ?

ஏ. அந்த நிறைவேற்றப்பட்ட பிரேரணைகளுள் இவ் வேலையில் நடைமுறைப்படுத்தப்பட்ட பிரேரணைகள் யாவை ? எந்த வருடம் தொடக்கம் ? எவ் அமைச்சின் கீழ் ?

ஐ. வருடாந்த வரவு செலவுத் திட்ட விவாதத்தின் போது இந்த நிறைவேற்றப்பட்ட பிரேரணைகள் தொடர்பாக கவனத்தைச் செலுத்தி ஆராய்ந்து பார்க்கப்பட்டதா ? எந்த வருடத்தில் ?

ஒ. நிறைவேற்றப்பட்ட பிரேரணைகளை எவரது இயலாமையினால் நடைமுறைப் படுத்தப்பட வில்லை ? இதற்குப் பொறுப்புச் சொல்ல வேண்டியவர்கள் யார் ?

ஓ. இது வரை நிறைவேற்றப்பட்ட பிரேரணைகளை மீண்டும் ஆராய்ந்து பார்த்து எதிர்கால நடவடிக்கையை மேற்கொள்வதற்கு இச் சபையின் மூலம் குழு ஒன்றினை நியமிப்பது சிறந்தது என்பதை நினைக்கின்றீர்களா ? அப்படியாயின் அதற்காக எடுக்கும் நடவடிக்கை யாது ?

**02.** **கௌரவ கே.டி. அறுணதீபால் உறுப்பினரினால் கௌரவ கல்வி, கலை கலாச்சார நடவடிக்கை, விளையாட்டு மற்றும் இளைஞர் விவகாரம், தகவல் தொழினுட்பம் தொடர்பான அமைச்சரிடம் 2016.05.17 ஆந் திகதி கேட்கப்பட்ட கேள்வி : (கே/vi (1)16/42)**

அ. ஹொரணை கல்வி வலயத்தில் கடமையாற்றும் ஆசிரியர் திரு. நிரோஷன் நவகமுவ அவர்கள் தொடர்பாக ஒழுக்காற்று நடவடிக்கை ஒன்று மேற்கொள்ளப்பட்டுள்ளதா ? அது எந்த ஒழுக்க மீறல் நடவடிக்கைக்காக ?

ஆ. அவ்வாறு ஒழுக்க மீறல் நடவடிக்கை ஒன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது என எவரினால் ஆரம்ப முறைப்பாடு அனுப்பப்பட்டுள்ளது ? அதன் உண்மைத் தன்மையை தீர்மானிப்பதற்கு ஆரம்ப சந்தர்ப்பத்தில் ஆரம்ப விசாரணை ஒன்று மேற்கொள்ளப்பட்டதா ? எவரினால் ? பரிந்துரைகள் என்ன ?

இ. (கே/vi (1)16/24) ஆம் இலக்க எனது கேள்விக்கு உங்களினால் வழங்கப்பட்ட பதிலில் குறிப்பிடப்பட்டுள்ள எந்த ஒழுக்காற்று நடவடிக்கைக் கோவையை அல்லது பிற சட்டம் ஒன்றை இந்த ஆசிரியர் மீறியுள்ளார் ?

ஈ. மே.மா/நிர்வாகம்/12/ஹொ/86 ஆம் இலக்க 2016.02.05 ஆந் திகதி மாகாண கல்விப் பணிப்பாளரின் கடிதத்தின் மூலம் உரிய ஆசிரியரிடம் விளக்கம் கோரப்பட்டுள்ளது என்பதனை நீங்கள் அறிவீர்களா ?

உ. (கே/vi (1)16/24) ஆம் இலக்க கேள்விக்கு வழங்கப்பட்டுள்ள பதிலுடன் மேலே "ஈ" இல் உள்ளடங்கியுள்ளவை இணங்கவில்லை என்பதனை நீங்கள் ஏற்றுக்கொள்கின்றீர்களா ? அப்படி இல்லையாயின் ஏன் ?

ஊ. ஹொரண கல்வி வலைய உத்தியோகத்தர்களினால் இந்த ஆசிரியர் தொடர்பாக வேண்டும் என்றே பொய்யான குற்றச் சாட்டுக்கள் தொடர்பான விடயங்கள் மற்றும் நீதிக்கு புறம்பாக செயற்பட்டுள்ளனர் என்பதனை நீங்கள் ஏற்றுக் கொள்கின்றீர்களா ? ஏற்றுக் கொள்ள வில்லையாயின் அதற்குக் காரணம் என்ன ?

**03.** **கௌரவ எச்.எம். உபாலி கொடிகார உறுப்பினரினால் கௌரவ முதலமைச்சர் மற்றும் நிதித் திட்டமிடல் ,சட்டம் ,ஒழுங்கு , பொறியியல் சேவை, உள்ளூராட்சி , மாகாண நிர்வாகம் , பொருளாதார மேம்பாடு, மின்சக்தி மின்வலு, சுற்றாடல் நடவடிக்கை, நீர் வழங்கல், வடிகாலமைப்பு மற்றும் சுற்றுலாத் துறை தொடர்பான அமைச்சரிடம் 2016.06.07 ஆந் திகதி கேட்கப்பட்ட கேள்வி : (கே/vi (1)16/45)**

அ. மேல் மாகாண சபையின் உள்ளூராட்சி அமைச்சுக்கு 2015 ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்டத்தில் எவ்வளவு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது ?

ஆ. அந் நிதியில் உள்ளூராட்சி வீதிகளுக்காக ஒதுக்கப்பட்ட நிதி எவ்வளவு ?

இ. அந் நிதியில் தற்போது கொழும்பு மாவட்டத்தில் மஹரகம நகர சபையின் அதிகாரப் பிரதேசத்திள் எவ்வளவு வீதிகள் காப்பட் இடப்பட்டுள்ளன ?

ஈ. அவ் வீதிகள் எவை ?

உ. அந்த ஒவ்வொரு வீதிகளுக்காக ஒதுக்கப்பட்ட நிதி எவ்வளவு ?

ஊ. அவ் வீதிகள் எதன் அடிப்படையில் ஒப்பந்தக் காரர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன ?

எ. நிதி ஆணைக்குழுச் சபையினால் வெளியிடப்பட்டுள்ள சுற்றறிக்கைக்கு இணங்க உள்ளூராட்சி வீதிகளை செப்பனிட அதிகாரம் வழங்கப்பட்டுள்ளதா ?

ஏ. அப்படியாயின் அந்தச் சுற்றறிக்கை எது ?

**04.** **கௌரவ எச்.எம். உபாலி கொடிகார உறுப்பினரினால் கௌரவ முதலமைச்சர் மற்றும் நிதித் திட்டமிடல் ,சட்டம் ,ஒழுங்கு , பொறியியல் சேவை, உள்ளூராட்சி , மாகாண நிர்வாகம் , பொருளாதார மேம்பாடு, மின்சக்தி மின்வலு, சுற்றாடல் நடவடிக்கை, நீர் வழங்கல், வடிகாலமைப்பு மற்றும் சுற்றுலாத் துறை தொடர்பான அமைச்சரிடம் 2016.06.07 ஆந் திகதி கேட்கப்பட்ட கேள்வி : (கே/vi (1)16/46)**

அ. மேல் மாகாணத்தின் உள்ளூராட்சித் தாபனங்களின் எண்ணிக்கை எத்தனை ?

ஆ. இவ் வேளையில் எத்தனை கலைக்கப்பட்டுள்ளன ?

இ. கொழும்பு, கம்பஹா, களுத்துறை மாவட்ட மட்டத்தில் அவை யாவை ?

ஈ. i. மஹரகம நகர சபைத் தேர்தலில் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்கள் எத்தனை பேர் இருந்தனர் ?
ii. அவ் உறுப்பினர்கள் எந்தக் கட்சிகளில் இருந்து தெரிவு செய்யப்பட்டனர் ?

உ. i. 2016 ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்டத்தில் மஹரகம நகர சபைக்கு எவ்வளவு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது ?
ii. அவ் வரவு செலவுத் திட்டத்தில் வீதி அபிவிருத்திக்காக எவ்வளவு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது ?

ஊ. எவ்வளவு வீதிகள் பூர்த்தியாக்கப்பட்டுள்ளன ?

எ. கேள்வி நடைமுறையின் கீழ் கொங்றீட் இடப்பட்ட வீதிகள், தார் வீதிகள், இன்டர்லொக் கல் இடப்பட்ட வீதிகள், காப்பட் இடப்பட்ட வீதிகளின் எண்ணிக்கை எவ்வளவு ?

ஏ. i. மஹரகம நகர சபையின் முன்னைநாள் உறுப்பினர்களுக்கு வீதி அபிவிருத்திக்காக எவ்வளவு நிதி ஒதுக்கிக் கொடுக்கப்பட்டது ?
ii. அவ் உறுப்பினர்கள் யார் ?
iii. அது எவ் வீதிகளுக்காக ?

ஐ. i. கேள்வி நடைமுறைக்கு மாறாக வழங்கப்பட்டுள்ள வீதிகள் எத்தனை காணப்படுகின்றன ?
ii. அவ்வாறு வழங்கப்பட்டுள்ள சங்கங்கள் எவை ?
iii. ஒப்பந்தக் காரர்கள் யார் ?

ஒ. i. அவ் வீதிகளுக்கு நிதியை ஒதுக்கும் அதிகாரம் உங்களிடம் காணப்படுகின்றதா ?
ii. இல்லையாயின் ஏன் ?

ஓ. i. மேல் மாகாண சபையின் உறுப்பினர்கள் 104 பேருக்கும் இந்த உள்ளூராட்சி வீதிகளை செப்பனிட ஏன் நிதி வழங்குவதில்லை ?

**05.** **கௌரவ எச்.எம். உபாலி கொடிகார உறுப்பினரினால் கடற்றொழில், வீதி, போக்குவரத்து, கூட்டுறவு அபிவிருத்தி மற்றும் வியாபாரம், வீடமைப்பு நிர்மாணம், தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் கைத்தொழில் மற்றும் கிராம அபிவிருத்தி தொடர்பான அமைச்சரிடம் 2016.06.07 ஆந் திகதி கேட்கப்பட்ட கேள்வி :**

**(கே/vi (1)16/47)**

அ. மேல் மாகாணத்தின் கொழும்பு கிராமிய வங்கிச் சங்கத்தின் மூலம் ஒழுங்கு செய்யப்பட்ட சீனச் சுற்றுலா தொடர்பாக நீங்கள் அறிவீர்களா ?

ஆ. அச் சுற்றுலா எந்த செயற்திட்டத்தின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட சுற்றுலாவொன்றாகும் ?

இ. அச் சுற்றுலாவில் எத்தனை பேர் கலந்து கொண்டனர் ?

ஈ. அவர்கள் எந்தத் தாபனத்தில் எப் பதவியினை வகிப்பவர்கள் ?

உ. அச் சுற்றுலாவில் எத்தனை மாகாண சபை உறுப்பினர்கள் கலந்து கொண்டனர் ?

ஊ. மஹரகம நகர சபையின் சேவகர் ஒருவர் இந்தச் சுற்றுலாவில் பங்குபற்றினாரா ? அது எவ்வாறு ?

எ. மாகாண சபை ஒன்றின் அல்லது கூட்டுறவுச் சங்கம் ஒன்றின் அங்கத்தவர் அல்லாத ஒருவர் பங்குபற்றினரா ?

ஏ. பங்குபற்றியிருந்தால் அந்த நபர் யார் ?

ஐ. அவர்களுக்காக எவ் அடிப்படையில் நிதி ஒதுக்கப்பட்டது ?

ஒ. சட்டத்திற்கு இணங்க அவ்வாறு நிதி ஒதுக்க முடியுமா ?

**06.** **கௌரவ நந்தன பத்மகுமார உறுப்பினரினால் கௌரவ முதலமைச்சர் மற்றும் நிதித் திட்டமிடல் , சட்டம் ,ஒழுங்கு , பொறியியல் சேவை, உள்ளூராட்சி , மாகாண நிர்வாகம் , பொருளாதார மேம்பாடு, மின்சக்தி மின்வலு, சுற்றாடல் நடவடிக்கை, நீர் வழங்கல், வடிகாலமைப்பு மற்றும் சுற்றுலாத் துறை தொடர்பான அமைச்சரிடம் கேட்பதற்கு :**

**(கே/vi (1)16/49)**

அ. i. களுத்துறை பிரதேச சபையின் கீழ் நடைமுறைப் படுத்தப்படும் மொரொன்துடுவ வாரச் சந்தை உடைத்து அகற்றப்பட்டுள்ளது என்பதனை நீங்கள் அறிவீர்களா ?
ii. அப்படியாயின் அது எப்போது ?
iii. எவ்வளவு காலத்திற்காக ?

ஆ. i. வாரச் சந்தைக்காக அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது என்பதனை நீங்கள் அறிவீர்களா ?
ii. அது எப்போது ?
iii. எவ்வளவு காலத்தில் வேலையை நிறைவு செய்வதற்காக ?

இ. i. இந்த நிர்மாண நடவடிக்கைக்காக எத் தாபனத்துடன் ஒப்பந்தம் செய்யப்பட்டிருக்கின்றது ?
ii. இதற்காக நிதி எத் தாபனத்தின் மூலம் வழங்கப்படுகின்றது ?

ஈ. i. இவ் ஒப்பந்த நிறுவனத்தின் பெயர் முகவரி என்ன ?
ii. இந்த தாபனத்தின் உரிமையாளரின் பெயர் மற்றும் முகவரி என்ன ?

உ. i. இது வரை வேலை நிறைவு செய்யப்படாததற்குரிய காரணம் யாது ?
ii. அதற்காக உள்ளூராட்சித் தாபனம் எடுத்துள்ள நடவடிக்கை யாது ?

ஊ. i. தற்போது வாரச் சந்தை நடாத்தப்படும் இடத்தினை உங்களுக்குத் தெரியுமா ?
ii. அது எந்த இடத்தில் ?
iii. அதன் காரணமாக வியாபாரிகளும் மக்களும் முகங்கொடுக்கும் பிரச்சினைகளுக்காக பிரதேச சபை எடுத்துள்ள நடவடிக்கை யாது ?
iv. அது என்ன ?

எ. i. தற்போது இந்த வாரச் சந்தை நடாத்தப்படும் இடத்தில் பிரதேச சபை குத்தகை நிதியை அறவிடுகின்றதா ?
ii. அது எவ்வளவு ?

**07.** **கௌரவ நந்தன பத்மகுமார உறுப்பினரினால் கௌரவ கல்வி, கலை கலாச்சார நடவடிக்கை, விளையாட்டு மற்றும் இளைஞர் விவகாரம், தகவல் தொழினுட்பம் தொடர்பான அமைச்சரிடம் கேட்பதற்கு :**

**(கே/vi (1)16/50)**

அ. i. களுத்துறை மாவட்டத்தில் எத்தனை கல்வி வலையங்கள் காணப்படுகின்றன ?
ii. அவை எவை ?

iii. அந்த வலைய மட்டத்தில் 2015 ஆம் ஆண்டில் க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் தோற்றிய மாணவர்கள் வெவ்வேறாக எவ்வளவு ?

iv. அப் பரீட்சையில் சித்திபெற்ற மற்றும் சித்திபெறாத மாணவர்களின் எண்ணிக்கை எவ்வளவு ?

v. வலையத்திற்கு இணங்க எவ்வளவு ?

ஆ. i. கணித பாடம் மட்டும் சித்தி பெறாத மாணவர்களின் எண்ணிக்கை எவ்வளவு ?

ii. அது வலைய ரீதியில் எவ்வளவு ?

இ. i. பாடசாலை மட்டத்தில் இப் பரீட்சைக்காக தோற்றி, கணிதப் பாடத்தில் மட்டும் சித்திபெறாத பாடசாலைகள் காணப்படுகின்றனவா ?

ii. அது எப்பாடசாலைகள் ?

ஈ. i. இதற்கு காரணமான விடயங்கள் தொடர்பாக உங்கள் அமைச்சினால் விசாரணை ஒன்று நடாத்தப்பட்டுள்ளதா ?

ii. அவ் விசாரணையின் முடிவு யாது ?

உ. i. இப் பாடசாலைகளின் பிள்ளைகளுக்காக அநீதி ஒன்று இழைக்கப்பட்டுள்ளது என்பதனை நீங்கள் ஏற்றுக் கொள்கின்றீர்களா ?

ii. இதற்காக எடுக்கும் நடவடிக்கை யாது ?

**08. கௌரவ யூ.எல். சேனக தமயன்த த சில்வா உறுப்பினரினால் கௌரவ கல்வி, கலை கலாச்சார நடவடிக்கை, விளையாட்டு மற்றும் இளைஞர் விவகாரம், தகவல் தொழினுட்பம் தொடர்பான அமைச்சரிடம் கேட்பதற்கு:**

**(கே/vi (1)16/51)**

அ. கொழும்பு மாவட்டத்தில் 2016 ஆம் ஆண்டு பாடசாலைகளுக்கு பிள்ளைகளை ஆட்சேர்க்கும் போது பொலிஸ் மற்றும் முப்படைகளில் சேவையாற்றிய அவர்களின் பிள்ளைகளைச் சேர்ப்பதற்காக எவ்வளவு எண்ணிக்கையான வெற்றிடங்கள் ஒதுக்கப்பட்டிருந்தன ?

ஆ. அவ் வெற்றிடங்களை கல்வி வலையம் மற்றும் பாடசாலை மட்டத்தில் வெவ்வேறாக காட்ட முடியுமா ?

இ. அவ் வெற்றிடங்களுக்காக பாதுகாப்பு கடமைகளில் ஈடுபட்டுள்ளவர்களின் பிள்ளைகளை சேர்த்த பின் மிகுதியான வெற்றிடங்களுக்காக மாகாண சபையின் பதவிக்குரியவர்களின், உறுப்பினர்களின் சிபாரிசின் கீழ் பிள்ளைகள் ஆட்சேர்க்கப் பட்டனர் என்பதனை நீங்கள் அறிவீர்களா ?

ஈ. அப்படியாயின் அப் பாடசாலைகள், மற்றும் நிரப்பிய வெற்றிடங்களின் எண்ணிக்கை, எந்த மாகாண சபை உறுப்பினர் மற்றும் பதவிக்கு உரியவரின் சிபாரிசுடனானவை ?

உ. ஒவ்வொரு உறுப்பினரது, பதவிக்குரியவரினது சிபாரிசின் கீழ் 2016 ஆம் ஆண்டில் முதலாம் தரத்திற்கு பிள்ளைகளை ஆட்சேர்த்துக் கொண்ட முறை தொடர்பாக பாடசாலைகள் உள்ளடங்கலாக எழுத்து மூல அறிக்கையை வழங்குவீர்களா ?

ஊ. சில உறுப்பினர்களுக்கு ஒரு பிள்ளையையாவது சேர்ப்பதற்கு சந்தர்ப்பம் கிடைக்கவில்லை என்பதனை அறிவீர்களா ?

எ. சில உறுப்பினர்களுக்கு, பதவிக்குரியவர்களுக்கு அதிகமான பிள்ளைகளைச் சேர்ப்பதற்கும் வேறு பகுதியினருக்கு சந்தர்ப்பம் ஒன்று கிடைக்கப் பெறாமைக்குமுரிய காரணங்களைக் குறிப்பிடுவீர்களா ?

ஏ. இவ் வெற்றிடங்களை உறுப்பினர்களுக்கு இடையே பகிர்ந்து வழங்குவது முதலமைச்சரின் சிபாரிசின் கீழ் இடம்பெற்றுள்ளது என்பதனை ஏற்றுக் கொள்கின்றீர்களா ?

ஐ. உங்களது பொறுப்பை முதலமைச்சருக்கு ஒப்படைத்ததற்கு உரிய காரணத்தைக் காட்டுங்கள் ?

**09. கௌரவ சுனில் வடகல உறுப்பினரினால் கௌரவ முதலமைச்சர் மற்றும் நிதித் திட்டமிடல் ,சட்டம் , ஒழுங்கு , பொறியியல் சேவை, உள்ளூராட்சி , மாகாண நிர்வாகம் , பொருளாதார மேம்பாடு, மின்சக்தி மின்வலு, சுற்றாடல் நடவடிக்கை, நீர் வழங்கல், வடிகாலமைப்பு மற்றும் சுற்றுலாத் துறை தொடர்பான அமைச்சரிடம் கேட்பதற்கு : (கே/vi (1)16/52)**

அ. கொட்டிகாவத்தை முல்லேரியா பிரதேச சபையின் அதிகாரப் பிரதேசத்தினுல் அங்கோடை பன்சலைத் தோட்டத்தில் தொடங்கி தலதெல் போக்கு வரை நீண்டு செல்லும் கால்வாய் வழி ஒன்று காணப்படுகிறது என்பதனை அறிவீர்களா ?

ஆ. அக் கால்வாயின் பெயர் என்ன? அந்த கால்வாயின் வரைபடத்தை சபைக்கு சமர்ப்பிக்க முடியுமா ?

இ. இக் கால்வாயின் இரு பகுதியிலும் அங்கீகாரமற்ற பல நிர்மாணங்கள் காணப்படுகின்றன என்பதனை நீங்கள் அறிவீர்களா ?

ஈ. மேற் கூறிய கால்வாய் சிறு மழைக்கும் கூட நிரம்பி வழிகின்றது என்பதனை நீங்கள் ஏற்றுக் கொள்கின்றீர்களா ?

உ. இது தொடர்பாக கொடிகாவத்தை முல்லேரியா பிரதேச சபையின் தவிசாளர் உள்ளிட்ட அதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்ட போதும் இது வரை எந்தவொரு புணர் நிர்மாண நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை என்பதனை நீங்கள் அறிவீர்களா ?

ஊ. இக் கால்வாய் விரைவாக புணர் நிர்மாணம் செய்ய நீங்கள் நடவடிக்கை எடுப்பீர்களா ? இல்லையாயின் ஏன் ?

## VI. வருகை தராமல் இருக்க அங்கீகாரம் பெறும் யோசனை

## VII. அமைச்சுக்களின் அறிவிப்புக்களும்/அமைச்சர்களின் தகவல்களும்

## VIII. தனிப் பட்ட தெளிவுபடுத்தல்கள்

## IX. தனிப்பட்ட உறுப்பினர்களின் நடவடிக்கைகள்

**01. கௌரவ லலித் எல்லாவல அவர்கள்**

மேன்மை தங்கிய ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேன அவர்களினது புதிய அரசின் மூலமும், சென்ற அரசினால் மேற்கொள்ளப்பட்டது எனக் கூறப்படும் ஊழல் மோசடி ஆட்கொலை, அரச சொத்துக்களின் முறைகேடான பாவனை தொடர்பாக இவ் வேளையில் குழு ஒன்றினை நியமித்து தவறிழைத்தவர்களை சட்டத்தின் முன் கொண்டுவந்து தண்டனை வழங்குவதற்கு திட்டமிடுவது மகிழ்ச்சிக்கு உரிய விடயம் ஒன்றாகும்.

1989 மற்றும் 1990 கால எல்லையினுள் இந் நாட்டில் மிகப் பாரிய அளவாக அரச சொத்துக்களை அழித்து ஒழித்த, மனித உயிர்களை அழித்த காலம் அண்மைக்கால இலங்கை வரலாற்றில் இடம்பெறவில்லை எனவே இது தொடர்பாக ஆராய்ந்து பார்ப்பதற்கு குழு ஒன்றினை நியமித்து அவ் அரசாங்கச் சொத்துக்களை அழித்து மனித உயிர்களைக் கொன்ற நபர்களுக்கு சட்டத்தின் மூலம் தண்டனை வழங்கவும் மற்றும் அழித்து ஒழிக்கப்பட்ட அரசாங்க சொத்துக்களின் பெறுமதியை உரிய தவறிழைத்தவர்களிடமிருந்து அறவிட்டுக் கொள்ள நடவடிக்கை எடுக்குமாறும் மேன்மை தங்கிய ஜனாதிபதியிடம் இம்மேல் மாகாண மாகாண சபை கேட்டுக் கொள்கின்றது. **(பி/vi (1)15/02)**

**02. கௌரவ மஹிந்த ஜயசிங்ஹ அவர்கள்**

பாடசாலைகளுக்குப் பிள்ளைகளை ஆட்சேர்த்துக்கொள்வதில் பாரிய சிக்கல் மிக்க நிலைமை ஒன்றாக ஏற்பட்டுள்ளது.

முதலாம் தரத்திற்கும் மற்றும் ஆறாம் தரத்திற்கும் பிள்ளைகளை ஆட்சேர்ப்பதற்காக ஏனைய தரங்களில் பிள்ளைகளை ஆட்சேர்க்கும் முறைக்கு இணைந்த வகையில் மிகவும் ஒழுங்கான வேலைத் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டிருந்த போதும் அந்த ஏனைய தரங்களுக்காக பிள்ளைகளை ஆட்சேர்த்துக் கொள்வதற்கு அவ்வாறான ஒழுங்காக வேலைத் திட்டம் ஒன்றில்லை எனவே பிள்ளைகளை ஆட்சேர்த்துக்கொள்ளும் போது பல்வேறுபட்ட கையூன்றல்களைப் பெறுதல் ஊழல் மோசடி போன்ற பல்வேறுபட்ட முறைகேடுகள் இடம்பெறுகின்றன என்பதனை கேள்விப்படக் கூடியதாக இருக்கின்றது.

எனவே முதலாம் தரத்திற்கு மற்றும் ஆறாம் தரத்திற்கும் பிள்ளைகளை ஆட்சேர்த்துக்கொள்ளும் போது தற்போது நடைமுறையில் உள்ளதும், அதேபோல் ஏனைய தரங்களுக்கு பிள்ளைகளை ஆட்சேர்ப்பதற்காக மிகவும் சிறந்த ஒழுங்கான வேலைத் திட்டம் ஒன்றினைத் தயாரித்து மேல் மாகாண சபையின் பாடசாலைகளில் நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்குமாறு உரிய எல்லா பகுதியினரிடமும் வேண்டுகோள் விடுக்க வேண்டும் என இம் மேல் மாகாண மாகாண சபை கருதுகிறது. **(பி/vi (1)15/04)**

## X. சபை ஒத்திவைப்பு

கே.எச்.டி.கே. சமரக்கோன்
செயலாளர்,
மேல் மாகாண மாகாண சபை

2016.06.08 ஆந் திகதி
சபைச் செயலாளர் காரியாலயம் (மே.மா)
மேல் மாகாண மாகாண சபை,
5ஆம் மாடி, Bஅலகு,

செத்சிறிபாய,
பத்தரமுல்ல.